Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 103/2025**

Preliminary Register

Deposition of **PW- 1 LW -1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சாமியப்பன் | Father Name | : | நாடிமுத்து |
| Village | : | வலங்கைமான் | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | ஆட்டோ ஓட்டுநர் |
| Religion | : | | Age | : | 38 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 05th day of March 2026.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

<u>**முதல் விசாரணை-**</u>

நான் மேற்படி முகவரியில் வசித்து ஆட்டோ ஓட்டுநராக தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். ஆஜர் 1 வது எதிரி வலங்கைமான் மாரியம்மன் கோவில் ஸ்டேன்டில் ஆட்டோ ஓட்டுகிறார். ஆஜர் 2 வது எதிரி 1 வது எதிரியின் சகோதரர். ஆஜர் 4 வது எதிரி 1 வது எதிரியின் அம்மா ஆவார்கள். கடந்த 24.04.2024 ம் தேதி காலை 11.30 மணியளவில் நான் மாரியம்மன் கோவில் ஆட்டோ ஸ்டான்டுக்கு எனக்கு வந்த சவாரியை ஏற்றுவதற்காக சென்றேன். ஸ்டேன்டிற்கு எதிரே உள்ள புங்கைமரத்தின் அடியில் அமர்ந்திருந்து எனது செல்போனை பார்த்துக்கொண்டிருந்தேன். அப்போது ஆஜர் 2 வது எதிரி கையில் வைத்திருந்த அருவாளால் எனது தலையின் பின்பகுதியில் வெட்டினார். மாரியப்பன் என்பவர்

எனது பின்னந்தலையில் கம்பியால் அடித்தார். ஆஜர் 4 வது எதிரி காலால் உதைத்தார். ஆஜர் 1 வது எதிரி எனது அண்ணனை எதிர்த்து பேசுறீயா குச்சிகாரி மவனே தேவுடியா மவனே என்று என்னை தகாத வார்த்தைகளால் திட்டினார். அதன்பின்பு எனது உடல் முழுவதும் இரத்தம் வழிந்ததால் அருகில் இருந்தவர்கள் சிகிச்சைக்காக 108 ஆம்புலன்ஸ் மூலம் என்னை கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துசென்று சேர்த்தார்கள். வழக்கு சம்பவம் அருகில் கடை வைத்திருக்கும் பூமிநாதன் மனைவி ராதா மற்றும் முத்து என்பவர்களுக்கும் தெரியும். அங்கு நான் 3 தினங்கள் சிகிச்சையில் இருந்தேன். நான் சிகிச்சையில் இருந்தபோது போலீசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை இவ்வழக்கு சம்பந்தமாக விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** -

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் வலங்கைமான் மகா மாரியம்மன் கோவில் ஆட்டோ ஸ்டான்ட் என்றால் சரிதான். நான் ஆட்டோ ஓட்டுநர் தொழில் செய்து வருகிறேன் என்றால் சரிதான். நான் மகாமாரியம்மன் கோவில் ஆட்டோ ஸ்டான் உறுப்பினர் இல்லை என்றால் சரிதான். நான் அங்கு உறுப்பினராக இல்லை என்ற காரணத்தால் ஆட்டோ ஸ்டான்ட் அருகில் உள்ள இடங்களில் ஆட்டோ ஓட்டி வந்து அங்கு உள்ள ஆட்டோ ஓட்டுநர்களிடம் பிரச்சனை செய்து வந்தேன் என்றால் சரியல்ல. வலங்கைமான் மகா மாரியம்மன் கோவில் ஆட்டோ ஸ்டான்டில் ஆட்டோ ஓட்டுநர் உறுப்பினராக சேர்த்துக்கொள்ள அங்குள்ள முக்கியஸ்தர்களிடம் சொல்லிவந்தேன் என்றால் சரிதான். வலங்கைமான் மகா மாரியம்மன் கோவில் ஆட்டோ ஸ்டான்டில் ஆட்டோ போடக்கூடாது என்று ஆட்டோ ஓட்டுநர்கள் மறுத்துவிட்டனர் என்றால் இல்லை ஆட்டோ ஓட்டுநர் சங்க தலைவர் சரி என்று ஒப்புக்கொண்டார். சம்பவத் தேதியிலிருந்து ஒரு வாரத்திற்கு முன்பு ஆட்டோ ஸ்டான்டின் அருகில் உள்ள ஆஜர் எதிரிகளின் வீட்டின் முன்பு எனது ஆட்டோவினை நிறுத்தியிருந்தேன் என்றால் சரியல்ல. அப்போது ஆஜர் எதிரிகளின் வீட்டின் முன்பு ஆட்டோவை நிறுத்தியது தொடர்பாக ஆஜர் எதிரிகளுக்கும்

எனக்கும் இடையே வாய்த்தகராறு நடந்தது என்றால் சரியல்ல. வலங்கைமான் மகா மாரியம்மன் கோவில் ஆட்டோ ஸ்டான்டில் ஆட்டோ போடக்கூடாது என்று கூறியபிறகு சம்பவத்தேதியிலிருந்து 1 மாதத்திற்கு முன்பிலிருந்து தொடர்ந்து பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரியல்ல. ஆட்டோ ஸ்டான்டில் மீறி நான் ஆட்டோவினை நிறுத்தியதால் அங்குள்ள ஓட்டுநர்கள் அனைவரும் சேர்ந்து, "நீ இங்கு ஆட்டோ ஓட்டக்கூடாது" என்று சொல்லும்போதே எனக்கும் மற்ற ஆட்டோ ஓட்டுநர்களுக்கும் வாய்தகராறு ஏற்பட்டு அங்கிருந்து வேகமாக ஓடும்போது தடுமாறி கீழே விழுந்ததால் எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. என்னை போலீசார் என்று விசாரித்தார்கள் என்றால் 27.04.2024 அன்று விசாரித்தார்கள். எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். எனக்கு நன்கு எழுத படிக்க தெரியும் என்றால் சரிதான். நான் சொன்ன சம்பவத்தினை எழுத்து மூலம் புகாராக கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி புகாரில் ஆஜர் எதிரிகள் என்னை தாக்கியதாக சொல்லப்படும் அருவாள், கம்பி பற்றி கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் என்னுடைய இரத்தக்கறை படிந்த சட்டையினை போலீசாரிடம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். சம்பவத் தேதியிலிருந்து ஒரு வாரத்திற்கு முன்பு ஆட்டோ ஸ்டான்டின் அருகில் உள்ள ஆஜர் எதிரிகளின் வீட்டின் முன்பு எனது ஆட்டோவினை நிறுத்தியது தொடர்பாக ஏற்பட்ட பிரச்சனை காரணமாக பொய்யாக புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கையொப்பம் செய்ததாக சொல்லும் புகார் வாக்குமூலத்தில் எழுதப்பட்டுள்ள விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.03.05 12:43:16 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 103/2025**

Preliminary Register

Deposition of **PW-2 LW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | முத்து | Father Name | : | மும்மூர்த்தி |
| Village | : | வலங்கைமான் | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | ஹோட்டல் |
| Religion | : | | Age | : | 48 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 05th day of March 2026.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

<u>**முதல் விசாரணை**</u>-

நான் மேற்படி முகவரியில் வசித்து ஹோட்டல் வைத்துள்ளேன், அ.சா.1 ஐ தெரியும். ஆட்டோ ஓட்டுநர். ஆஜர் எதிரிகளைத் தெரியும். எனது ஹோட்டலுக்கு அருகில்தான் எதிரிகளின் வீடு உள்ளது. சுமார் 2 வருடத்திற்கு முன்பு ஒருநாள் பகல் 11.30 மணியளவில் வழக்கு சம்பவம் நடந்தது. வழக்கு சம்பவத்திற்கு 1 மாதத்திற்கு முன்பாக வலங்கைமான் மாரியம்மன் கோவில் ஆட்டோ ஸ்டான்டில் உறுப்பினர் இல்லை என்று சாமியப்பனுக்கும் ஆட்டோ ஸ்டான்டில் உள்ள உறுப்பினர்களுக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டது. உறுப்பினர் இல்லாதவர்கள் ஸ்டான்டில் ஆட்டோ ஓட்டுவதற்கு அனுமதி இல்லை என்று ஆட்டோ ஸ்டான்டில் உள்ள உறுப்பினர்களுக்கும் அ.சா.1க்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டு அதில் அ.சா.1

சம்பவயிடத்திலிருந்து ஓடி வரும்போது கீழே விழுந்ததில் தலையில் அடிப்பட்டது. அதன்பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலம் அ.சா.1 சிகிச்சைக்கு அனுப்பப்பட்ட விபரம் தெரியும். போலீசார் விசாரணையில் மேற்சொன்னவாறுதான் கூறினேன்.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு பகுதி அனுசரணையாக சாட்சியமளிக்காததால் அரசு தரப்பில் பகுதி பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் அனுமதி அளிக்கப்பட்டது.**

சம்பவத்தின்போது அ.சா.1 யிடம் ஆஜர் 1 வது எதிரி இங்க வந்து எதுக்குடா ஆட்டோ ஓட்டுற என்று பிரச்சனை செய்து தகாத வார்த்தைகளால் பேசினார் என்று பின்னர் ஆஜர் எதிரி அவருடைய சகோதரரான திருமுருகன் மற்றும் மாரியப்பன் ஆகியோருக்கு போன்மூலம் தகவல் சொல்லி சம்பவயித்திற்கு வரவைத்தார் என்றும் எதிரி திருமுருகன் வீட்டிலிருந்து எடுத்துவந்த அருவாளால் அ.சா.1 ஐ பார்த்து எனது அண்ணனை எதிர்த்து பேசுகிறாயா என்று அ.சா.1ஐ தலையில் வெட்டினார் என்றும் கீழே கிடந்த கம்பியால் அ.சா.1 ஐ பின்பக்க தலையில் எதிரி மாரியப்பன் அடித்தார் என்றும் சம்பவயித்திற்கு வந்த 4 வது எதிரி அ.சா.1 ஐ காலால் உதைத்தார் என்றும் வழக்கு சம்பவத்தை நான் நேரடியாக பார்த்தேன் என்றும் போலீசார் விசாரணையில் நடந்த உண்மையை கூறிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகள் அனைவரும் நான் நடத்தும் ஹோட்டலுக்க அருகில் வசிப்பவர்கள் என்பதாலும் எனக்கு நன்கு பழக்கமானவர்கள் என்பதாலும் அவர்களை இவ்வழக்கிலிருந்து காப்பாற்ற அ.சா.1 கீழே விழுந்ததில் தலையில் காயம் பட்டது என்று சம்பவம் நடந்த தேதி மாதம், வருடம் நினைவில்லை என்றும் எதிரிகள் கேட்டுக்கொண்டதன் பேரில் அவர்களுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.**

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.03.05 12:43:27 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 103/2025**

Preliminary Register

Deposition of **PW-3 LW - 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ராதா | Husband Name | : | பூமிநாதன் |
| Village | : | வலங்கைமான் | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | ஜூஸ் கடை |
| Religion | : | | Age | : | 32 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 05th day of March 2026.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**<u>முதல் விசாரணை-</u>**

நான் மேற்படி முகவரியில் வசித்து ஜூஸ் கடை நடத்தி வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். ஆஜர் எதிரிகளைத் தெரியும். எனது ஜூஸ் கடைக்கு அருகில்தான் ஆஜர் எதிரிகளின் வீடு உள்ளது. சுமார் 2 வருடத்திற்கு முன்பு ஒருநாள் பகல் 11.30 மணியளவில் வழக்கு சம்பவம் நடந்தது. வழக்கு சம்பவத்திற்கு 1 மாதத்திற்கு முன்பாக வலங்கைமான் மாரியம்மன் கோவில் ஆட்டோ ஸ்டான்டில் உறுப்பினர் இல்லை என்று சாமியப்பனுக்கும் ஆட்டோ ஸ்டான்டில் உள்ள உறுப்பினர்களுக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டது. உறுப்பினர் இல்லாதவர்கள் ஸ்டான்டில் ஆட்டோ ஓட்டுவதற்கு அனுமதி இல்லை என்று ஆட்டோ ஸ்டான்டில் உள்ள உறுப்பினர்களுக்கும் அ.சா.1க்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டு அதில் அ.சா.1

சம்பவயிடத்திலிருந்து ஓடி வரும்போது கீழே விழுந்ததில் தலையில் அடிப்பட்டது. அதன்பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலம் அ.சா.1 சிகிச்சைக்கு அனுப்பப்பட்ட விபரம் தெரியும். போலீசார் விசாரணையில் மேற்சொன்னவாறுதான் கூறினேன்.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு பகுதி அனுசரணையாக சாட்சியமளிக்காததால் அரசு தரப்பில் பகுதி பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் அனுமதி அளிக்கப்பட்டது.**

சம்பவத்தின்போது அ.சா.1 யிடம் ஆஜர் 1 வது எதிரி இங்க வந்து எதுக்குடா ஆட்டோ ஓட்டுற என்று பிரச்சனை செய்து தகாத வார்த்தைகளால் பேசினார் என்று பின்னர் ஆஜர் எதிரி அவருடைய சகோதரரான திருமுருகன் மற்றும் மாரியப்பன் ஆகியோருக்கு போன்மூலம் தகவல் சொல்லி சம்பவயித்திற்கு வரவைத்தார் என்றும் எதிரி திருமுருகன் வீட்டிலிருந்து எடுத்துவந்த அருவாளால் அ.சா.1 ஐ பார்த்து எனது அண்ணனை எதிர்த்து பேசுகிறாயா என்று அ.சா.1ஐ தலையில் வெட்டினார் என்றும் கீழே கிடந்த கம்பியால் அ.சா.1 ஐ பின்பக்க தலையில் எதிரி மாரியப்பன் அடித்தார் என்றும் சம்பவயித்திற்கு வந்த 4 வது எதிரி அ.சா.1 ஐ காலால் உதைத்தார் என்றும் வழக்கு சம்பவத்தை நான் நேரடியாக பார்த்தேன் என்றும் போலீசார் விசாரணையில் நடந்த உண்மையை கூறிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகள் அனைவரும் நான் நடத்தும் ஜூஸ் கடைக்கு அருகில் வசிப்பவர்கள் என்பதாலும் எனக்கு நன்கு பழக்கமானவர்கள் என்பதாலும் அவர்களை இவ்வழக்கிலிருந்து காப்பாற்ற அ.சா.1 கீழே விழுந்ததில் தலையில் காயம் பட்டது என்று சம்பவம் நடந்த தேதி மாதம், வருடம் நினைவில்லை என்றும் எதிரிகள் கேட்டுக்கொண்டதன் பேரில் அவர்களுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.**

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.03.05 12:43:36 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.